








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## செப்டம்பர் - 15.09.2018

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்









We Shine Academy™

## தமிழக நிகழ்வுகள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக(**MGNREGA – Mahatma Gandhi National Rural Employment Guarantee Act**) மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு **5 விருதுகளைப்** பெற்றுள்ளது. அவற்றுள்,
    - ஜியோ MGNREGA திட்டத்தின் கீழ் மக்களுக்கு ஆதாரை ஏற்படுத்தித் தருதல் மற்றும் மாற்றித் தருதல் ஆகியவற்றில் சிறப்பான செயல்பாட்டிற்கான மாநில அரசு(தமிழ்நாடு) விருது பெற்றது.
    - கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் 7 திட்டங்களில் தன்னிறைவு அடைந்ததற்காக தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் தேசிய விருது பெற்றுள்ளது.
    - தேசிய ஊரக வேலைவாய்ப்பு சட்டத்தின் நிர்வாகத்திற்கான சிறப்பு விருதை நகராட்சி நிர்வாகம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் துறை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிகழ்வுகள்

- 2018ம் ஆண்டிற்கான **மத்திய நிதிநிலை அறிக்கையில்** அறிவித்துள்ளவாறு விவசாயிகள் தங்கள் உற்பத்திக்கு ஏற்ற விலையை உறுதி செய்வதற்காக ‘பிரதான் மந்திரி அன்னதாதா அய் சன்ராக்சன் அபியான்(**PM-AASHA – Pradhan Mantri Annadata Aay Sanrakshan Abhiyan**) என்ற புதிய தலைமைத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது.

- சிறு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்ததை நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு, ஆந்திரப் பிரதேச மாநில அரசானது **‘மின்னணு – ரைத்து’** என்னும் **கைப்பேசி தளத்தை** தொடங்கியுள்ளது.

- ○ தெலுங்கில் மின்னணு-ரைத்து என்பது மின்னணு – விவசாயி என்று பொருள்படும்.

- கோவா மாநில **பெண்கள் மற்றும் குழந்தைகள்** மேம்பாட்டு அமைச்சகமானது கடலோர பகுதிகளில் இடர்பாடுகளிலுள்ள பெண்களுக்காக உலகளாவிய உதவியளிக்கும் **சேவை எண்ணை(181)** தொடங்கி உள்ளது.

- **விவசாயம்** மற்றும் அது சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பு மீதான **புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா** மற்றும் **எகிப்து** நாடுகளுக்கிடையே கையெழுத்தாக உள்ளது.
  - ○ இதே போன்று, அமைதியானப் பயன்பாடுகளுக்காக விண்வெளியைப் பயன்படுத்துதல் மற்றும் ஆய்வுப் பயணங்களில் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கிடையே கையெழுத்தாக மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **ஆரோக்கியமான வாழ்க்கை, கல்வியறிவு, வாழ்க்கை தரம்** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐ.நா மனிதவள மேம்பாட்டு அமைப்பு வெளியிட்டுள்ள ஐ.நா. மனிதவள மேம்பாட்டு குறியீட்டு தரவரிசைப் பட்டியல் **2017ல் இந்தியா 189 நாடுகளில் 130வது இடம்** பிடித்துள்ளது. இப்பட்டியலில் **நார்வே முதலிடம்** பிடித்துள்ளது.
- **குறிப்பு**
  - ○ 2016ம் ஆண்டிற்கான மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் இந்தியாவானது 131வது இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- மங்குட் புயல் - பிலிப்பைன்ஸ்-ஐ நோக்கி மங்குட் புயல் வேகமாக வருகிறது. இந்த புயல் செப்டம்பர் 15ம் தேதி கரையை கடக்க உள்ளது.



We Shine Academy ™

- **குறிப்பு**
    - 2013-ம் ஆண்டு பிலிப்பைன்ஸ்-ஐ தாக்கிய புயலின் பெயர் - ஹய்யன் என்பது குறிப்பிடத்தக்கது.

- அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ள தென்கொரியாவின் முதல் நீர்மூழ்கி கப்பலான **‘டோசன் ஆன் சாங் - ஹோ’** என்னும் நீர்மூழ்கி கப்பல் தென்கொரியாவின் கடற்படையில் **செப்டம்பர் 14** அன்று இணைத்துக் கொள்ளப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **செப்டம்பர் 15 – தேசிய பொறியாளர் தினம்**
    - அணைக்கட்டு தொழில் நுட்பத்தில், தானியங்கு மதகு தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த இந்தியாவின் முன்னோடி பொறியாளரான **விஸ்வேஸ்வரய்யாவின் 157வது பிறந்த நாள் நினைவாக** செப்டம்பர் 15, 2018 அன்று தேசிய பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.
- **குறிப்பு**
    - பொருளாதாரத்தின் அடிப்படை கூறுகளை ஆராய்வதற்காக இந்திய தேசிய காங்கிரஸால் 1938ல் அமைக்கப்பட்ட திட்டக்குழுவின்(Planning Committee) தலைவராக விஸ்வேஸ்வரய்யா தேர்ந்தெடுக்கப்பட்டார்.
    - இவர் 1936ம் ஆண்டில் இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதாரம்(Planned Economy For Indian) என்னும் புத்தகத்தை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.